**செய்தி வெளியீடு எண்: 094** **நாள்: 06.02.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களுக்கு **4.2.2018** அன்று காலை 7.00 மணி அளவில், சென்னை தியாகராய நகரில் உள்ள ராஜன் கண் மருத்துவமனையில், தலைமை மருத்துவர் திரு. மோகன் ராஜன் அவர்களால் கண்புரை நீக்கம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அச்சமயம், சென்னை அரசு கண் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் மகேஸ்வரி அவர்கள் உடனிருந்தார். அன்றைய தினமே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீடு திரும்பினார். இன்று **(6.2.2018)** மாலை 7.00 மணியளவில், மருத்துவர் மோகன் ராஜன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இல்லத்திற்கு சென்று கண்களை பரிசோதித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாக குணமடைந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

* * * * *

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**